**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'மகனறிவு தந்தை அறிவு' – இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
2. நீரின் இருப்பை அறிந்துள்ள பறவை எது?
3. இடர் வந்தபோது துணை நிற்பது எது?
4. நட்புடையவர்களுக்கு என்ன செய்தல் இனிது?
5. எப்போது உணவு உண்ண வேண்டும்?
6. ஒருவனது முயற்சியின் திறனை எவ்வாறு அறியலாம்?
7. பாட்டின் இலக்கணங்களைப் பதிவு செய்துள்ள நூலின் பெயர் என்ன?
8. தமிழ்மொழியில் தோன்றிய முதல் தூது நூலின் பெயர் என்ன?
9. சிங்கன் யார்?
10. மூவினங்களை வளர்ப்பவர் யார்?

11. கலம்பகம் என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.
12. சித்திர மடலை இயற்றியவர் யார்?
13. திருவாசகம் அருளியவர் யார்?
14. மாறனகப் பொருள் என்பது என்ன?
15. இயற்கைப் புணர்ச்சி என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. அந்தாதி – பொருள் விளக்கம் தருக.
2. ஒட்டக்கூத்தரின் மூவருலா பற்றி எழுதுக.
3. மடல் இலக்கியம் பெயர்க்காரணம் தருக.
4. சிற்றிலக்கியம் தோன்றுவதற்கான களங்கள் யாவை?
5. இனிய உறவுகள் என்றும் இன்பம் பயப்பன என்பதை விளக்குக.
6. ஒருவன் பின்பற்ற வேண்டிய நற்பண்புகள் யாவை?
7. ஈகை பற்றிப் பழமொழி நானூறு கூறுவன யாவை?
8. வசந்தவல்லியின் தோற்றப் பொலிவை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சமூகமேம்பாட்டிற்கு நாலடியார் கூறும் பரிந்துரைகள் யாவை?

(அல்லது)

(ஆ) உழவுத் தொழிலின் பெருமையை விளக்குக.

2. (அ) முயற்சி செய்வாரின் பண்புகளாகப் பழமொழி கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எவையேனும் இரண்டு சிற்றிலக்கிய வகைகளை விவரித்து எழுதுக.

3. (அ) கலிங்கத்துப் பரணியின் இலக்கியச் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழின் சிறப்பினைப் பிள்ளைத்தமிழ் வாயிலாக நிறுவுக.